


Metro லீடர்
# மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

CN ceynews
www.ceynews.lk

லீடர்: 03 | இதழ் -263 | 15.02.2023 | பக்கங்கள்: 06 | editorml21@gmail.com | விலை: 50/-

# மின்சாரக் கட்டணம் மீண்டும் அதிகரிப்பு!



மின்சாரக் கட்டணத்தை இன்று (15) முதல் 66 சதவீதமாக அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இந்த பிரேரணை க்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும், ஏனைய மூன்று உறுப்பினர் களின் இணக்கப்பாடு காரணமாக பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இலங்கை மின்சார சபைக்கு 287 பில்லியன் ரூபா மேலதிக வருமான த்தைஈட்டும் வகையில், 02

## பழ. நெடுமாறனின் கருத்தால் மீண்டும் இனவாதம் தோன்றலாம்



**-சுரேஷ் பிரேமச்சந்திரன்-**

*13 ஆம் அரசியலமைப்பு திருத்தம் பாகுபாடின்றி முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.* 02

## அரச அச்சகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை – பெப்ரல்

PAFFREL

வாக்குச் சீட்டுகளை வழங்கத் தவறிய அரச அச்சகத் திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தேர்தல் கண்காணிப்பாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

வாக்குச் சீட்டுகளை வழங்காமல் இருக்க அரச அச்சகம் அரசியலமைப்புக்கு முரணான தீர்மானத்தை 02

## நிதி அமைச்சின் செயலாளருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு




நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தனவிற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

உள்ளூராட்சிறத் தேர்தலுக்காக கோரப்பட்ட நிதி ஒதுக்கீடு வழங்கப்படாமை குறித்து 02

## நிதி இருக்கின்றது வாக்குகளே இல்லை



**உதய கம்பன்வில குற்றச்சாட்டு**

நிதி இல்லை என்பதற்காக அல்ல வாக்குகள் இல்லாததால் தான் தேர்தலை நடத்த அரசாங்கம் தயங்குகின்றது என உதய கம்மன்பில தெரிவித்தார். 02

## உள்ளூராட்சி சபைத் தேர்தலானது அரசாங்கத்தை மாற்றக்கூடிய தேர்தல் அல்ல – அமைச்சர் பிரசன்ன



உள்ளூராட்சிசபைத் தேர்தலானது அரசாங்கத்தை மாற்றி ஜனாதிபதியை மாற்றக்கூடிய தேர்தல் அல்ல என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டையே தீயிட்டு கொளுத்தி மக்களைக் கொல்லும் அளவுக்கு கடுமையான மனநிலை கொண்ட ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு அதிகாரம் வழங்குவது மிகவும் ஆபத்தானது என அமைச்சர் மேலும் கூறுகிறார்.

கம்பஹாவில் (12) நடைபெற்ற கம்பஹா 02

## மின்சாரக் கட்டணம் மீண்டும்...

66% மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதற்கான பிரேரணை ஜனவரி 02 ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

எனினும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி தொடர்ந்து மறுக்கப்பட்டதுடன், கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் அதன் உறுப்பினர்கள் பலர் ராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பழ. நெடுமாறனின் கருத்தால்...

அதற்காக முத்தரப்பு பேச்சுவார்த்தை ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் கூறியுள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையில் தமிழர் தரப்பு, இந்திய அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்க தரப்பில் பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலை புலிகளுடன் நீண்டகால தொடர்பினை கொண்ட பழ. நெடுமாறனின் தெரிவித்த கருத்தால் மீண்டும் இனவாதம் தோன்றலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது கருத்து உண்மையாக இருந்தாலும் அதன் உறுதிப்பாட்டை இலங்கை மற்றும் புலம்பெயர் தமிழர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்

## நிதி இருக்கின்றது வாக்குகளே...

கொழும்பில் நேற்று (14) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வழங்க முடியாமல் போனமை வரவு செலவுத் திட்டத்தை இழப்பதற்கு சமம் எனவும் தெரிவித்தார்.

## அரச அச்சகத்திற்கு எதிராக...

எடுத்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவும் அரசாங்க அச்சகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெப்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுகள் அடங்கிய பாதுகாப்பான பொதிகள் இன்று புதன்கிழமை இலங்கை தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படவிருந்தது.

எனினும் வாக்குச் சீட்டுகள் வழங்கப்படாததால், அந்தச் செயல்முறை காலவரையின்றி இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நிதி அமைச்சின் செயலாளருக்கு...

கலந்துரையாடுவதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு திட்டமிட்டபட இம்மாதம் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெறும் என ஆணைக்குழு அறிவி த்துள்ளது.

தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு விநியோகம் நேற்று ஆரம்பிக்கப்பட விருந்த போதிலும் அது தாமதமாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்து ள்ளது.

எவ்வாறாயினும், நிதிப் பிரச்சினை காரணமாக தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுகளை வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அரச அச்சம் கூறியுள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தலானது அரசாங்கத்தை...

மாவட்ட ஆட்சி வேட்பாளர் கூட்டங்களில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் பின்வருமாறு கூறினார்.

கொரோனா தொற்றுநோயால் நாடு மூடப்படும்போது, நாட்டை மூட வேண்டாம் என்று நாங்கள் கூறினோம். நாங்கள் நாட்டை மூடிவிட்டு மூன்று தடுப்பூசிகளையும் போட்டுவிட்டு மீண்டும் நாட்டை திறக்க முற்பட்டபோது நாடு இன்னும் பாதுகாப்பாகவில்லை, நாட்டைத் திறக்க வேண்டாம் என்று தொழிற்சங்கத்தினர்

## உள்ளூராட்சி சபைத் தேர்தலானது...

ஆர்ப்பாட்டம் பண்ணினர். நாடு திறந்தால் கடைகளை அடைக்கத் தொடங்கினர். 88-89 இல் சிறு காகிதத்துண்டால் கடைகள் மூடப்பட்டது போல் தொழிற்சங்கங்கள் மூலம் கடைகள் மூடப்பட்டன. ஏனெனில் பொருளாதாரத்தை வீழ்த்துவதே அதற்காண காரணமாக இருந்தது. நாம் தெளிவாக சொல்கிறோம். வங்கிகளுக்கு அனுப்பினால் ராஜபக்சக்கள் திருடுவார்கள் என்று வெளிநாடு வாழ் மக்களிடம் அரசுக்கு பணம் அனுப்ப வேண்டாம் என்று கூறப்பட்டது. வெளிநாட்டில் இருந்து அனுப்பியவருக்கு யாருக்கு பணம் அனுப்பப்பட்டது என்பது தெரியும். இது தவிர அவர்களது உறவின ர்களின் பெயரில் அனுப்பப்படுகிறதே அன்றி ராஜபக்சவின் பெயரில் அல்ல. எனவே அதனை எப்படி திருட முடியும்? அதை நம்பியவர்களும் உண்டு. நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்வதற்காகவே இது மேற்கொள்ளப்பட்டது. கொவிட் காரணமாக சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரமுடியவில்லை. அன்னிய கையிருப்பை கட்டியெழுப்ப முடியவில்லை. பணம் செலவழிக்கப்பட்டது. இதன் விளைவாக இன்று நாம் இதை அனுபவிக்கிறோம்.
இயற்கை சீற்றம், போர் போன்ற பல்வேறு காரணங்களால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. மிக மோசமான காலம் கொவிட் வந்த காலமே. எனவே, எங்களிடம் கையிருப்புக்கள் தீர்ந்தபோது, எரிவாயு மற்றும் எண்ணெய் கொண்டு வர டொலர்கள் இல்லை.
அப்போது போது மக்கள் அழுத்தத்திற்கு ஆளாகினர். சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அழுத்தம் கொடுத்து வெளியே வந்த மக்களின் வீடுகளை எரித்து மக்களை கொல்வதற்கு வேலை செய்தனர். நாங்கள் யாரையும் பழிவாங்கு வதில்லை. நாங்கள் எப்போதும் வன்முறையற்ற அரசியலையே கடைப்பிடித்து வருகிறோம். இந்த தேர்தலை ஒரு கட்சியாக சந்திக்க தயாராக உள்ளோம். உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்று கிராமத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை ஏற்போம்.
94 இல் வெற்றி பெற்றபோது மக்களை துன்புறுத்தவில்லை. ஆனால், கடந்த மே 9ஆம் திகதி எங்கள் வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டதற்கு என்ன காரணம்? எனது வீட்டிற்கு தீ வைக்கப்பட்ட வீடியோக்கள் அனைத்தும் என்னிடம் உள்ளன. எனது வீட்டிற்கு தீ வைத்தது வேறு யாருமல்ல ஜே.வி.பி.இனரே. மினுவாங் கொடையில் நடைபெற்ற ஜே.வி.பி கூட்டத்தின் முதல் பேச்சாளர் வீடு எரிப்புக்கு தலைமை தாங்கியவர். அவரைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டேன். ஜனதா விமுக்தி பெரமுன மணி சின்னம் மற்றும் திசைகாட்டி சின்னத்துடன் வந்த தான் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. எனது வீடு மட்டுமல்ல எனது செயலாளரின் வீடும் எரிக்கப்பட்டது. ஜே.வி.பிக்கு போலித்தனமும் பொறாமையும் மட்டுமே உள்ளது. இராணுவ சீருடையில் கொள்ளையடித்து துரத்தப்பட்ட ஒருவர் இன்று மினுவாங் கொடை மாநகரசபைக்கு திசைகாட்டி சின்னத்தில் வாக்கு கேட்கின்றார். திசைகாட்டியில் வாக்கு கேட்பவர்களை பற்றி இன்று முகநூலில் பேசப் படுகின்றது. ஜனதா விமுக்தி பெரமுன விமர்சனங்களைத் தவிர வேறு எதையும் செய்யாத கட்சி. தீ வைக்கும் உயிர்களை கொல்லும் மனநிலை கொண்ட ஒரு கூட்டத்திற்கு அதிகாரம் கொடுப்பது ஆபத்தான விஷயம். அதிகாரத்தைப் பெற எத்தனை ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்? ஆட்சிக்கு வந்து ஆட்சியை தக்கவைக்க எத்தனை ஆயிரம் மக்கள் தொலைந்து போவார்கள்? இந்த தேர்தல் அரசாங்கங் களை கவிழ்க்கக்கூடிய அல்லது ஜனாதிபதியை மாற்றக்கூடிய தேர்தல் அல்ல.
அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது. பாராளுமன்றத்தை கைப்பற்றி ஜனநாயகத்தை கவிழ்த்து அரசாங்கம் அழிந்தால் இன்று நாம் எங்கே இருப்போம் என்று கற்பனை செய்து பாருங்கள். அமைதியான போராட்டத்தை ஏற்கிறோம். மன அழுத்தம் உள்ள மக்கள் போராடுவது எங்களுக்கு தெரியும். ஆனால் நீர்த் தடாகத்தில் விழுந்து குளிக்கும் மனப்பான்மை கொண்டவர்கள் இந்த நாட்டைக் கைப்பற்றினால் என்ன நடக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.
நாடு அராஜகமாக மாறிய போது, இந்த நாட்டைக் கைப்பற்ற வருமாறு அநுர குமாரை அழைத்தோம். சஜித் பிரேமதாசவை வந்து இந்த நாட்டை கைப்பற்றுங்கள் என்றோம். கட்சி என்ற ரீதியில் அன்றி பதவிகளை ஏற்கவில்லை. இந்தப் பொருளா தாரப் பேரழிவில் இருந்து மீண்டு வர உதவுமாறு கேட்டோம். இதை ஏற்க அனைவ ரும் பயந்தனர். இதனை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டார். நாடு கையகப்ப டுத்தப்பட்டு பொருளாதாரத்தை நிர்வகித்து, இருந்த நிலையில் இருந்து நாட்டை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு வந்துள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும் போது, இந்த நாட்டை சிறந்த நிலைக்கு கொண்டு வர முடியும். இன்று இந்தியாவும் சீனாவும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன. ஆனால் இது நாம் எதிர்பார்ப்பது அல்ல. இந்த நாட்டின் உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்தை உயர்மட்ட நிலைக்கு கொண்டு வருவதற்கு நாம் உழைக்க வேண்டும். இதனால்தான் நான் பிரபலமான முடிவுகளை எடுக்க முடியாது என்று ஜனாதிபதி கூறுகிறார். மக்கள் மனப்பான்மையிலிருந்து விலகி நாட்டில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதாகக் கூறுகிறார். அதற்கு நாங்கள் முழு ஆதரவை வழங்குகிறோம்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்தப் பிரிவில் ஐ.தே.க வேட்பாளர் 29% வெற்றி பெற்றுள்ளார். ஜேவிபி 8% எடுத்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 10%. பொஹொட்டுவ வேட்பாளரே 54% எடுத்துள்ளனர். அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். ஜனாதிபதி கோட்டாபயவுக்கு ஆலோசனை வழங்கி நாட்டை அராஜகப்படுத்திய வியத்மகவின் சிலர் வேறு கட்சிகளுக்குச் சென்றுள்ளனர். மற்றவர்கள் என்ன செய்வது என்று திகைத்து நிற்கிறார்கள். நமது வெற்றிக்காக அந்த மக்களை ஒன்று திரட்ட வேண்டும். ஒரு ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றாலும், ஒரு பிரிவு வெற்றி பெறும். கிராமத்திற்கு வேலைசெய்யக்கூடிய ஒருவரை நியமிக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை நாம் அனைவரும் ஒன்றிணைந்து தூக்கி நிறுத்த வேண்டும்

## -யாழில் ரணில் தெரிவிப்பு-







நல்லிணக்கம், அபிவிருத்தி மற்றும் கலாசாரம் என்பனவே அரசின் கொள்கை என்றும், வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக புதிய எதிர்பார்புடன் அனைத்து இனத்தவர களும் சகோதரத்துவத்துடன் கைகோர்த்து செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது தலைவர் பொன்னம்பலம் இராமநாதன் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சிங்கள மற்றும் தமிழ்த் தலைவர்கள் இணைந்து செயற்பட்டால் நாட்டை வேகமாக முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் எனவும் தெரிவித்தார்.

இந்திய அரசின், 1,350 கோடி ரூபா நன்கொடையில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, 'கலாசார மத்திய நிலையம்' (11) முற்பகல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு ஜனாதிபதி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது 75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை கொழும்பில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலும் கொண்டாட நாம் தீர்மானித்தோம். அந்த வேலைத்திட்டத்தை நாம் இந்த கலாசார மையத்திலிருந்தே ஆரம்பிக்கின்றோம். இது எமக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பெற்றுக்கொடுத்த பரிசாகும். அதனால் அவருக்கும் இந்திய அரசுக்கும் நன்றி தெரிவிப்பதே நான் செய்யும் முதல் விடயம்.

இந்தியாவும் இலங்கையும் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களில் பிரதானமானதொரு அம்சம் இதுவாகும். ஒரு புறத்தில் இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும் மறுபுறத்தில் விசேடமாக திருகோணமலை துறைமுகத்தின் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பிலும் நாம் கலந்துரையாடி வருகின்றோம். வலு சக்தி தொடர்பிலும் நாம் பேச்சு நடத்தி வருகின்றோம். அதுபோலவே எமது பொருளாதார நெருக்கடியின்போது இந்தக் கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கும் இந்திய அரசு எமக்கு வழங்கிய ஒத்துழைப்பை நாம் பாராட்டுகின்றோம்.

இந்தக் கலாசார மையம் ஒரு பொதுவான மையமாகும். நான் எப்போதும் கூறுவேன் எம்மிடையேயுள்ள கலாசாரத்தை வேறு பிரிக்க முடியாது என்று. ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் இலங்கை என்றால் மறுபக்கம் இந்தியாவாகும்.

எம்மிடமுள்ளது ஒரு கலாசாரம். அதனை நாம் பாதுகாத்து மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும். அதனால் இந்த மையத்தை பொதுமக்களிடம் கையளிப்பதை முன்னிட்டு உங்கள் அனைவர் சார்பிலும் இந்தியாவுக்கும் இந்தியாவின் பிரதமருக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மக்களிடமிருந்து எமது சுதந்திரப் போராட்டத்துக்குக் கிடைத்த ஒத்துழைப்புக்காகவே 75ஆவது சுதந்திர தினத்தை நாம் இம்முறை யாழ்ப்பாணத்தில் கொண்டாடத் தீர்மானித்தோம்.

யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் ஆரம்பித்த இந்து மறுமலர்ச்சி வேலைத்திட்டத்தைத் தொடர்ந்தே ஹிக்கடுவே ஸ்ரீசுமங்கள தேரர் பௌத்த மறுமலர்ச்சியை ஆரம்பித்தார். எனவே, ஆறுமுக நாவலர் முன்னெடுத்த பணிகளில் இருந்துதான் எமது சிங்கள தலைமைத்துவமும் உருவாகியது.

பொன்னம்பலம் இராமநாதனுக்கு நன்றி கூறும் வகையிலேயே வெசாக் தினம் விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையர்களால் தெரிவு செய்யப்பட்ட முதல் தலைவரே பொன்னம்பலம் இராமநாதன் ஆவார்.

1915 ஆம் ஆண்டு குழப்பங்கள் நிலவிய காலத்தில் எமது சிங்கள பௌத்த தலைவர்களைப் பாதுகாத்துக் கொடுத்தவர் பொன்னம்பலம் இராமநாதன் என நான் இவ்விடத்தில் கூற விரும்புகின்றேன்.

ஹென்றி பேதிரிஸின் வாழ்க்கையை பாதுகாக்குமாறு அவர் அப்போதைய ஆளுநருக்கு அறிவித்தார். அதற்கு பதிலாக ஹென்றி பேதிரிஸின் நிறைக்குச் சமனான தங்கத்தை தருவதாகக் கூறினார். எனினும், அது வெற்றியடையவில்லை.

பொன்னம்பலம் அருணாச்சலம் இலங்கை தேசிய சபையை உருவாக்கினார். தொழிற்சங்கங்களுக்கு தலைமைத்துவம் தாங்கினார். சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியிருந்த போதும் துரதிஷ்டவசமாக அவர் 1924 ஆம் ஆண்டு உயிரிழந்தார். அதிலிருந்து ஒரு வருடத்துக்குப் பின்னர் எப்.ஆர் சேனாநாயக்க காலமானார்.

அவர் வாழ்ந்திருந்தால் இதை விடவும் வித்தியாசமானதொரு வரலாற்றை நாம் கண்டிருந்திருப்போம். சிங்கள கலையை எமக்கும் உலகுக்கும் தெரியப்படுத்தியவர் ஆனந்த குமாரசுவாமி . அவரின் காலத்திலேயே இது மேம்படுத்தப்பட்டது.

அருணாச்சலம் மஹாதேவாவும் இந்நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்திருந்தார். அது போலவே இந்து தர்மத்தை முன்னேற்றுவதற்கும் கொழும்பு சிவன் கோவிலை கட்டுவதற்கும் இங்கு கோயில்களை உருவாக்கவும் இந்த குடும்பம் உதவி செய்தது. இந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையின் சிங்களம், தமிழ், பௌத்தம், இந்து ஆகிய பிரிவுகள் முன்னேற உதவி செய்தனர்.

இலங்கையர் சார்பாகவும் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மக்கள் சார்பாகவும் அக்குடும்பத்துக்கு நன்றி கூற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அவர்களைப் போலவே வைத்தியலிங்கம் துரைசாமியையும் எம்மால் மறக்க முடியாது. சுதந்திரத்தைப் பெறுவதற்காக டி.எஸ் சேனாநாயக்கவுக்கு உதவிய அமைச்சர் சி.சுந்தரலிங்கம், அமைச்சர் சி.சிற்றம்பலம், அமைச்சர் நல்லையா ஆகியோரையும் நாம் இந்த இடத்தில் நினைவுகூர வேண்டும். நாம் ஜி.ஜி பொன்னம்பலத்தையும் இங்கே நினைவுகூர வேண்டும். நாம் செல்வநாயகத்தையும் இங்கே நினை வுபடுத்த வேண்டும். அதுபோலவே அமைச்சர் எம்.திருச்செல்வத்தையும் நினைவுபடுத்துகின்றோம்.

இந்தத் தலைவர்களே ஏனைய தலைவர்களுடன் இணைந்து இலங்கையை உருவாக்குவதற்காகப் பணியாற்றினர். அதன் காரணமாகவே இப்பிரதேசத்தில், இந்த யாழ்ப்பா ணத்தில் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட இந்த அரசு தீர்மானித்தது.

நாம் தற்போது புதியதொரு பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். இலங்கையர்களாக ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். நல்லிணக்கம் தொடர்பில் நான் கடந்த 8 ஆம் திகதி அன்று பேசினேன். எனவே, அது பற்றி நான் இங்கே மீண்டும் பேசப் போவதில்லை. வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் நான் நேற்று பேசினேன். அதனால் அது குறித்தும் நான் இங்கே பேசப்போவதில்லை. ஆனால், கலாசாரம் தொடர்பில் நான் இங்கு பேசப்போகின்றேன்.

இந்தத் தருணத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். நல்லிணக்கம், அபிவிருத்தி, கலாசாரம் இவையே எமது கொள்கையாகும். யாழ்ப்பாணக் கலாசாரத்தில், தமிழ் கலாசாரத்தில் இலங்கையின் கலாசாரம் போஷணைக்குள்ளாக் கப்பட்டுள்ளது.

இந்தத் தமிழ் கலாசாரம் இலங்கை யிலிருந்து உருவான கலாசாரம் என்பதுடன் இது தமிழ் நாடு மற்றும் கேரளாவுடனும் தொடர்புபட்டதொரு கலாசாரம் ஆகும். இது விசேடமாக தஞ்சாவூரிலிருந்து வந்த பாணடியன், விஜய நகர் இராச்சியங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளது.

சந்திரபாகு ஆட்சியாளர் முதல் ஆரியச்சக்கரவர்த்தி அரசர்களின் காலம் வரை, சப்புமல் புவனேகபாகு அரசரின் காலம், சங்கிலி மன்னனின் காலம் ஆகியவற்றின்போது விசேட கலாசார பிணைப்புகள் இப்பிரதேச த்தில் உருவாக்கப்பட்டன. நல்லூரில் பாரிய கோயிலைக் கட்டுவித்தனர். அதுபோலவே சங்கிலிய மன்னரின் பாரிய மாளிகை இருந்தது. அன்று நிர்மாணிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளைப் பார்த்தால் அந்த மாளிகை கள் எவ்வளவு விசாலமானது என்பதைப் புரிந்துகொள்ளலாம். கோட்டை அரசருக்கு இதைவிட பெரிய மாளிகையொன்று அவசியம் என்றால் அவரது மாளிகை இதைவிட மிக பிரமாண்டமாக இருந்திருக்கும் என்று எம்மால் இதைப் பார்த்து ஊகித்துக்கொள்ள முடியும்.

'சிராவஸ்தி மஹால்' எனும் விசாலமான கலாசார மத்திய நிலையம் ஒன்று இருந்தது. தஞ்சாவூர் சிராவஸ்தி மஹால் அதற்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டது. பழைய புத்தகங்கள் இருந்தன. வரலாறு குறித்தும் மருத்துவ விஞ்ஞானம் தொடர்பிலும் பயன்படுத்தப்பட்டு வந்த செக்கராச சேகரம் என்ற நூலையும் திருக்கேதீஸ்வரத்தையும் போர்த்துக்கீசிலிருந்து வந்தவர்கள் அழித்ததுடன் அவற்றைத் தீயிட்டும் கொளுத்தினர்.

அதனால்தான் மீகபுள்ளே ஆரச்சி போர்த்துக்கேயருக்கு எதிராக இரண்டு கலகங்களை முன்னெடுத்தார். அவரை மறந்துவிட வேண்டாம். மீண்டும் இக்கலாசாரம் ஒல்லாந்து காலத்தில் இழக்கப்பட்டது. தேசவழமை சட்டமாக்கப்பட்டது. மீண்டும் வரலாறு புதுபிக்கப்பட்டது.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் இது மீண்டும் மேம்படுத்தப்பட்டது. 1840இல் முதலாவது பத்திரிகை வெளியிட ப்பட்டது. புத்தகங்கள் வெளிவந்தன. அதனுடாக மீண்டும் இலக்கியம் வளர்ந்தது. எனினும், யுத்தத்துடன் இவையனைத்தும் மீண்டும் அழிக்கப்பட்டன. நூலகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. யாழ்.கோட்டை சிதைக்கப்பட்டது.

வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டை நாம் அனைவரும் ஒன்றிணைந்து தூக்கி நிறுத்த வேண்டும். அப்போது இது எமது எல்லோரதும் நாடு ஆகும். இந்த இடம் தான் யாழ்ப்பாணத்தின் தமிழ் கலாசாரத்தின் மத்திய நிலையமாக இருக்க வேண்டும். அதனால் அமைச்சரே, நாம் இந்த இடத்திற்கு 'சரஸ்வதி மஹால்' என பெயரிடவுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடியிடம் கூறுங்கள். நாம் புதிய எதிர்பார்ப்புடன் முன்னேறிச் செல்வோம். அனைவருக்கும் நன்றி" – என்றார்.




# தொலைத் தொடர்பு கோபுரத்தை இடைநிறுத்தக் கோரி ஆர்பாட்டம்

**எஸ்.எம்.எம்.முர்ஷித், பர்ஸான்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் செம்மண்ணோடை எம்.பி.சீ.எஸ். வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் தொலைத்தொடர்பு கோபுரத்தை இடைநிறுத்தக் கோரி (11) சனிக்கிழமை பிரதேச மக்களால் போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் செறிந்து வாழும் குறித்த பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதால் பொதுமக்களுக்கு புற்றுநோய் மற்றும் சரும நோய்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரிவித்தே இவ் எதிர்ப்பு போராட்டத்தில் பொதுமக்கள் ஈடுபட்டனர்.

தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்படும் கட்டிடத்திற்கு முன்னால் ஒன்று திரண்ட மக்கள் கோபுரம் வேண்டாம், அதிகாரிகளே எங்கள் கருத்தை கேளுங்கள் என்ற சுலோகங்களை ஏந்தியவாறு தங்களது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வருகை தந்த வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம்.எல். ஆர்.பண்டார, கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் க.கமலநேசன், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ. ரமீஸா, பிரதி திட்டப் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத், வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.ஏ.கபூர் ஆகியோர் வருகை தந்தனர்.

தொலைத்தொடர்பு கோபுரத்தை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்து அதிகாரிகளிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன்,





இது தொடர்பாக ஆராய்வதற்காக வேண்டி தொலைத்தொடர்பு கோபுரத்தை பொருத்தும் பணிகளை ஒரு வாரத்துக்கு இடைநிறுத்தி வைக்குமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம்.எல்.ஆர். பண்டார கட்டிட உரிமையாளருடன் கலந்துரையாடி யதற்கு அமைய கோபுரம் அமைக்கும் வேலைகள் தற்காலிகமாக ஒத்திவைப்பதாக கட்டிட உரிமையாளர் பொருந்திக் கொண்டதற்கமைய ஆர்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# சாய்ந்தமருதில் அஹதியா பாடசாலைகளின் முன்னேற்றம் பற்றிய மீளாய்வுக் கூட்டம்





**எம்.என்.எம்.அப்ராஸ்**

சாய்ந்தமருதில் அஹதியா பாடசாலைகளை முன்னேற்றுவது சம்மந்தமான மீளாய்வுக் கூட்டம் சாய்ந்தமருது தாறுல் குர் ஆனியா அஹதியா சம்மேளனத்தின் தலைவர் அஷ் செய்க் ஏ.எம்.அன்ஸார் தலைமையில் (11) அல் ஹிலால் வித்தியாலய கூட்டப மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்திற்கு அல் ஹிலால் அஹதிய்யா பாடசாலை, அஸ் சபீனா அஹதிய்யா பாடசாலை மற்றும் தாறுல் குர்ஆனியா அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்கள் நிர்வாகத்தினர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது சாய்ந்தமருதில் அஹதிய்யா பாடசலைகள் ஆரம்பித்து 30 வருடமாகியும் அஹதியா பாடசாலையின் முக்கியத்துவம், தற்கால மாணவ மாணவிகளில் பலர் மார்க்கக் கல்வியை சீராக கற்று அதன்படி நடந்து கொள்ளாததன் காரணமாக பல்வேறு வேண்டப்படாத சிக்கல்களுக்குள் சிக்கித்தவிர்க்கும் நிலை உருவாகியுள்ளதாகவும் இங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெறும் சமயம் சார் அஹதிய்யா பாடசாலைகளில் இணைந்து கொண்டு மார்க்க ரீதியான கல்வி உள்ளிட்ட அறிவைப் பெற முஸ்லிம் மாணவர்கள் அஹதிய்யா பாடசாலைகளை பயன்படுத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.



அட்டாளைச்சேனை பிரதேச செயலத்திற்குட்பட்ட சமுர்த்தி பயனாளி ஒருவருக்கு வீட்டு லொத்தர் சீட்டிழுப்பு மூலம் 2 இலட்சம் ரூபாய் கிடைக்கப்பெற்றது.

அதற்கான காசோலையை பிரதேச செயலாளர் அஹமட் சாபீரினால் வழங்கி வைக்கப்பட்டன. இதில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.எம்.ஹமீட் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ். உனைஸ் ஆகியோரை படத்தில் காணலாம்.

**படம்:எம்.எப்.நவாஸ்**

# காத்தான்குடியில் இரத்ததான நிகழ்வு



**எம்.பஹுத் ஜ/னைட்**

காத்தான்குடி தள வைத்தியசாலையின் இரத்த வங்கி ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு சனிக்கிழமை (11) காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.



காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ, ஏ. துமிந்த நயனஸ்ரீ தலைமையில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

sportsml77@gmail.com

## SPORTS லீடர்



# ரீ–20 சுதந்திர வெற்றிக் கிண்ணம் பாலமுனை ட்ரைஸ்டார் வசமானது




**–ஐ.ஏ.சிறாஜ், நூருல் ஹுதா உமர்–**

பாலமுனை ட்ரைஸ்டார் மற்றும் பாலமுனை அல் அறபா அணிக ளுக்கிடையிலான ஷிஹாப் கூல் எண்ட் கொட் மார்ட் சுதந்திர தின வெற்றிக் கிண்ண ரீ– 20 கடினப்பந்து போட்டி பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

நாணைய சுழற்சியில் வெற்றி பெற்ற அறபா அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் முடிவில் 138 ஓட்டங்களை பெற்றது.

பாலமுனை அல் அறபா அணி சார்பில் றிபான் 26 ஓட்டங்களும் அம்ஜத் 36 ஓட்டங்களையும் பெற்றதோடு பாலமுனை ட்ரைஸ்டார் வீரர்களான சாஜின் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஆஷிக் 2 விக்கெட்டுக்களையும் பெற்றுக் கொண்டனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ட்ரைஸ்டார் அணி 9 விக்கெட்டுகளை இழந்து 19.3 ஓவரில் 139 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

பாலமுனை ட்ரைஸ்டார் வீரர் எஸ்.ட. பாயிஸ் 37 ஓட்டாங்களையும் கியாஸ் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். இந்த போட்டியின் சிறப்பாட்டக்காரராக பாலமுனை ட்ரைஸ்டார் வீரர் எஸ்.ட .பாயிஸ் தெரிவு செய்யப்பட்டதுடன் சகலதுறை வீரராக றிபான் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியின் பிரதம அதிதியாக ஆசிரியர் ஐ.எல்.எம்.பாயிஸ் கலந்து கொண்டதுடன் அதிதிகளாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். றியாஸ், எம்.ஐ.மனாப் ,என்.ட.அல்பி, சிபான் அஸீஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.












நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அல்– அமான் சூப்பர் சல்லேங்கர்ஸ் விளையாட்டு கழகத்தினால் நடாத்தப்பட்ட கிரிக்கெட் மற்றும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வு வவுனியா, சாளம்பைக் குளத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். (படம்: நூருல் ஹுதா உமர்)